# போர்வாள்


"போர்வாள்"

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 6 8 0 |
| 6 மாதம் | ரூ. | 3 4 0 |

"போர்வாள்" நிலையம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.




ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
இரா. இளஞ்செழியன், B.A. (Hons.).



திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 2
வெளி நாடு அணா 2½

வாள் 4 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1982 மாசி 12
24—2—51 சனிக்கிழமை | வீச்சு 25


★  ★


## கைத்தறி நெசவாளி, இன்று!

# நெசவாளர் நெருக்கடி—ஆட்சியாளர் அலட்சியம்

[அருப்புக்கோட்டை எம் எஸ். இராமசாமி]

சென்னை மாகாண நூல் பஞ்சம் பற்றியும், அதற்குரிய காரணங்கள் பற்றியும், கடந்த பிப்ரவரி 13-ல், சட்டசபையில், என்றுமில்லாத அளவு விரிவாக, தொழில் மந்திரி தோழர். சி. பெருமாள்சாமி ரெட்டியார் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவருடைய பேச்சு, நெசவாளர்களுக்கு கடுகளவுகூட நம்பிக்கையூட்டாமல் இருப்பதுடன், எதிர்கால நெசவாளர் வாழ்க்கையில், கடுமையான பயங்கர நிகழ்ச்சிகள் ஏற்படும் என்று கருதத்தக்க விதத்திலும் இருக்கிறது.

இந்த மாகாணத்தில் 5 லட்சம் கைத்தறிகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால், இந்த 5 லட்சம் என்கிற கணக்கு எப்போது எடுக்கப்பட்டது என்பதை ஒருவரும் குறிப்பிடுவதில்லை 1943-ல் எடுத்த கணக்கின்படிதான் 5-லட்சம் கைத்தறிகள் என்று எல்லாரும் சொல்கிறார்கள். இந்தக் கணக்கு எடுத்த பிறகு கடந்துபோன ஆண்டுகள் 7 ஆகும். இந்த 7 ஆண்டுகளில் தறிகாரன் மகன் தறிகாரனாக வளர்ந்த நெசவாளர் பரம்பரை எவ்வளவு என்பதை, நாம் கவனத்திற்குக் கொண்டுவாராமல் இருக்கமுடியாது. அதைக் கவனிக்கும்போது புதிதாகத் தோன்றிய தறிகளும் ஒரு லட்சம் வரை இருக்கலாம்.

நமது மாகாணத்தில் தற்சமயம் நெய்துகொண்டிருக்கும் கைத்தறிகள் ஏறத்தாழ 6 லட்சம். இந்த 6 லட்சம் தறிகளையும் உயிர்த்துணையாக நம்பி வாழும் மக்கள் ஏறக்குறைய 36 லட்சம் பேர் இருக்கலாம். 1947-ல் டாக்டர். நாராயணசாமி நாயுடு என்பவரைக்கொண்டு கைத்தறிகளின் தொகை, அவற்றின் நிலை, முதலிய பூராவிவரங்களும் சேகரிக்கும்படி சர்க்கார் நியமித்திருந்தது.

அந்த நாராயணசாமி நாயுடு என்பவர், சரியான விவரங்களைச் சேகரித்திருப்பார் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், நமது மாகாணத்தின் பல்வேறு நெசவாளர் தலைவர்களையும், ஸ்தாபனங்களையும், அவர் கலந்துகொண்டதாகவே தெரியவில்லை. என்றாலும், அவர் கணக்குப்படி 1947-ல் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருந்த நமது மாகாண மக்கள் $27\frac{1}{2}$ லட்சம் பேர் என்று பெருமாள்சாமி ரெட்டியார் பேச்சிலிருந்து அறிகிறோம். நம் தொழில் மந்திரியார் கணக்குப்படியே வைத்துக்கொண்டாலும், நமது மாகாணத்தில் 5 லட்சம் தறிகள் இருக்கின்றன என்பதும், அதைக்கொண்டு வாழும் மக்கள் $27\frac{1}{2}$ லட்சம் பேர் என்பதும் தெளிவு.

இந்த $27\frac{1}{2}$ லட்சம் மக்களும் கடந்த 6 மாத காலமாக நூல் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர். கஷ்டப்படுகின்றனர் என்பது கவலையற்றவர்களின் வாய்ப்பேச்சு — செத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இதற்கிடையில், நெசவாளர்களின் கிளர்ச்சி நாள்தோறும் நடந்துவருகிறது. பொதுக்கூட்டங்கள், விண்ணப்பங்கள், தூது கோஷ்டிகள், ஆகிய பல முறைகளில், சர்க்காருக்குத் தங்கள் குறைகளை எடுத்துக் காட்டினார்கள் நெசவாளர்கள். எதற்குமே சர்க்கார் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. இறுதியாக, நெசவாளர்கள் நேரடி நடவடிக்கைப் போராட்டங்களில் இறங்கிவிட்டனர். வேறு என்ன செய்ய வழி இருக்கிறது?

## ஏன் நூல் இல்லை?

நூல் பஞ்சம் ஏன் வந்தது? என்ற கேள்விக்கு தொழில் மந்திரி கூறும் காரணங்கள் விசித்திரமானவை:—

(1) கையிருப்பு மிகுதிப்பட்டதால், நூல் ஏற்றுமதிக்குத் தாராளமாக அனுமதியளிக்கப்பட்டது.

(2) பருத்தி கிடைக்காமல் நூல் உற்பத்தி குறைந்துவிட்டது.

இவைகள்தான் அவர் கூறும் காரணங்களில் முக்கியமானவை. இந்த இரண்டு காரணங்களாலும் நாம் என்ன கருதுகிறோம் என்றால், 'கையிருப்பு மிகுதியாக இருந்ததென்று ஏற்றுமதி செய்தோம், இப்போது பற்றாக்குறை என்று கையைப் பிசைகிறோம்.'' என்பது, சர்க்கார் நிர்வாகத்தின் பொறுப்பற்ற — கவலையற்ற — விவேகமற்ற தன்மையைக் காட்டுகிறது என்பதுதான்.

"பருத்தி உற்பத்தி குறைந்துவிட்டது" என்பதும், சர்க்காரின் மூடத்தனத்தை வெளிப்படுத்துமே தவிர, வேறொரு பயனுமில்லை. எப்படி எனில்:— இந்த ஆண்டில்தான் மழை பொய்த்துவிட்டது என்று கூறலாமே தவிர, சென்ற ஆண்டில் பருத்திவிளைவு இல்லை என்று சொல்லமுடியாது. இந்த ஆண்டும் பருத்தி எடுக்கவேண்டிய பருவம் இப்போதுதான். நிலைமை இப்படி இருக்க 6 மாதத்

திற்குமுன்பிருந்தே ஏற்பட்டிருக்கும் நூல் பஞ்சத்திற்கு இந்த ஆண்டு பருத்தி விளைச்சல்தான் காரணம் என்பது, எப்படிப் பொருந்தும்?

## தப்புக் கணக்கு

இவைகள் ஒருபுறமிருக்க, இந்த மாகாணக் கைத்தறிகளின் முழுநேர வேலைக்கும் எவ்வளவு நூல் தேவை என்று கணக்கிடுவதிலும் சர்க்கார் வழிதவறிப் போகிறது!

நம் மாகாணத்திற்குவேண்டிய நூல் ஜினுசுகள் பலதிறப்பட்டவை. இவைகள் எல்லாம் சேர்த்து மாகாணத்தின் மொத்தத் தேவை, 40,000 பேல்கள் மாதம் ஒன்றுக்கு வேண்டியிருக்கும். ஆனால், நம் சர்க்கார் என்ன சொல்கிறது? மாகாணத்தின் மொத்தத் தறிகள் 4,00000 என்றும், அவற்றிற்கு தேவையான நூல் பேல் 29,000 என்றும் குருட்டுக்கணக்குப் போடுகிறது! இது மட்டுமா! இங்கு, எண்ணிக்கையிலே 5,00000 தறிகள் என்றாலும், அவற்றில் நெய்துகொண்டிருக்கும் தறிகள் 2,00000 தான் என்றும் உளறிக்கொண்டிருக்கிறது! எந்தக் கணக்கை வைத்துக்கொண்டு கனம்பெருமாள்சாமி ரெட்டியார் பேசுகிறார் என்பதே நமக்கு விளங்கவில்லை. இந்தத் தப்புக் கணக்கின் அடிப்படையில்தான் மத்திய சர்க்காரிடம் 29,000 பேல் நூல் கேட்கப்பட்டிருக்கிறது! நாடு உருப்படுமா?

## நெசவாளருக்கு உபதொழில்!

இங்குள்ள கைத்தறிக்காரருக்குத் தேவையான நூல் சமீபகாலத்திற்குள் கிடைக்காதென்பதை கனம் ரெட்டியாரவர்களே மறைமுகமாகச் சொல்கிறார்! எப்படி என்றால்:—“நெசவாளர்கள் வேறு ஏதாவது உபதொழில் கற்றுக்கொள்ளவேண்டும்” என்பதுதான் அது,

இங்குள்ள நெசவாளர்கள் பரம்பரை பரம்பரையாக நெசவுத் தொழிலையே செய்து மெலிய உடம்புடன் இருப்பதோடு, நீண்டகால வறுமைக் களஞ்சியமாக வாழ்க்கை நடாத்தி வந்திருப்பதால், சரியான உணவின்றி மிகவும் பலங்குன்றியவர்களாகவும் இருக்கிறார்கள் இவர்களால், வேறு உபதொழில் செய்ய முடியுமா? ஒருக்காலும் முடியாது. அதோடு, நெசவாலைக்குப் போதுமான நூல் கிடைக்கும்போது, கைத்தறிக்காரன் மட்டும் வேறு தொழில் கற்றுக்கொள்ள வேண்டுமென்று போதிப்பது, சிந்திப்பவர்க்கு என்ன உணர்ச்சியை ஊட்டும்?

## நமது வேண்டுகோள்.

உண்மையாகவே கைத்தறிக்காரனுக்கு உதவவேண்டுமென்ற எண்ணமும், குடிசைத்தொழிலை வளர்க்கவேண்டுமென்ற கொள்கையும், சர்க்காருக்கு இருக்குமானால் இம்மாதிரி பைத்தியக்காரத்தனமான கணக்குகளையும், யோசனைகளையும் தூர எறிந்துவிட்டு கைத்தறிகளுக்காக மாதம் ஒன்றுக்கு 40,000 பேல்களை ஒதுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் மாகாண சர்க்கார் போராட வேண்டும். தறிகாரர்கள் பட்டினியால் இறந்துவிடாதபடி 'பஞ்சப்படி' கொடுக்கவேண்டும். நூல் ஏற்றுமதியை அடியோடு நிறுத்திவிட்டு ஜவுளி ஏற்றுமதிக்குத் தாராளமான அனுமதி அளிக்கவேண்டும்.

## மகத்தான தவறு.

ஒவ்வொரு ஆண்டுகளிலும் இடை இடையே சர்க்கார், ஒரு பெருந்தவறைச் செய்துவருகிறது. நூல்மில் முதலாளிகளின் தொந்தரவு பொறுக்காமல் நூல் ஏற்றுமதியை அனுமதிப்பதும், நெசவாளர் கூச்சல் கிளம்பினால் நூல், ஜவுளி ஏற்றுமதிகளை நிறுத்திவிடுவதுமான தவறை, செய்கிறார்கள்.

இதனால், கைத்தறிக்காரனுக்கும், கைத்தறி ஜவுளி வியாபாரிகளுக்கும், ஏற்படும் இன்னல் சொல்லும் தரமன்று. புடவை விற்பனையாகிறது என்று கருதினால் நூல் கிடையாது! நூல் கிடைத்தால் புடவை விற்காது! ஏன் இந்த நிலைமை? நூல் ஏற்றுமதியை எவ்வளவு குறைக்கிறோமோ, அவ்வளவுக்கு புடவை ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டும். அப்படிச் செய்தால் இந்த நாட்டிலுள்ள எல்லா நெசவாளருக்கும் நன்மை உண்டாகும். நமது சர்க்கார் அப்படிச் செய்யாது! நூல ஏற்றுமதியையும் நிறுத்தும்! அதே நேரத்தில் ஜவுளி ஏற்றுமதியையும் குறைத்துவிடும்! ஏன் என்று கேட்டால், நாட்டில் துணிப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகப் 'புரளி' செய்யும்! சில தினங்களுக்கு முன்னால்கூட இது மாதிரியான செயல் நடந்திருக்கிறது. மத்திய மந்திரி மஹ்தாப், நூல் ஏற்றுமதியைத்தடுத்துவிட்டேன் என்றார். அதே நேரத்தில் பம்பாயில் இருக்கும் டெக்ஸ்டைல் கமிஷனர், “40 கோடி கெஜம் ஜவுளிக்கு மேல் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கமாட்டோம்” என்கிறார்! இது என்ன புத்திசாலித்தனம்?

இந்தச் செயல்களைக் கொண்டு நாம் என்ன தீர்மானிக்கலாம்? இருக்கிற நிலைமை தெரியாமலும், புள்ளிவிவரம் தெரியாமலும், நாட்டின் தொழிலைச் சர்க்கார் நாசம் செய்கிறார்கள் என்பதா?, அல்லது வேண்டுமென்றே கைத்தறித் தொழிலைக் கொல்கிறார்கள் என்பதா? கைத்தறி நெசவாளர்களே! விழிப்புடனிருந்து சர்க்கார் செயலைக் கவனியுங்கள்! போராடுங்கள்!!

# போர்வாள்

[ திராவிடர் வார வெளியீடு ]

| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1981 மாசி 12 | வீச்சு |
|---|---|---|
| 4 | 24—2—51 சனிக்கிழமை | 25 |


## கைத்தறி உலகில் கொந்தளிப்பு!

கண்ணீர் சிந்தினார்கள்—கவனிப்பாரில்லை!

கதறி அழுதார்கள்—கவலையைத் துடைப்பாரில்லை!

ஐயகோ என்று கூவினார்கள்—ஏன், என்ன வேண்டும் என்று கேட்டார் இல்லை!

பசி பசி என்று பதறினார்கள்-போக்குவோம் உன் பரிதாபத்தை, அளிப்போம் வாழ்வு என்று யாருமே அன்புடன் முன் வந்து ஆதரவுடன் கூறினாரில்லை.

அமைச்சர்களைப் பேட்டி கண்டு, ஐயன்மீர், எம் குறை தீர்மின் என்று கெஞ்சிக் கேட்டார்கள்—கோரிய பலன் கிட்டிற்றில்லை.

பொதுக்கூட்டங்கள் பல போட்டு, பட்டினியும் பஞ்சமும் வாட்டி வதைக்கின்றன எங்களை என்பதைப் பணிவான குரலில் தெளிவாக விளக்கிப் பார்த்தார்கள்—ஆமாம் ஆமாம் மெய்தான் உங்கள் உரைகள் என்றனரே தவிர அனைவரும், வேறு நல் விளைவு ஏதும் உருவாயிற்றில்லை.

புள்ளி விவரங்களைப் பொறித்துக்காட்டி வெள்ளத்திற் சிக்கிய படகாயிற்று எங்கள் வாழ்வு என்பதைத் துண்டு அறிக்கைகள் மூலம் நாட்டுக்கெல்லாம் நயந்துரைத்துப் பார்த்தார்கள்-அச்சிட்ட செலவுதான் வீணாயிற்று, அவர்களின் அச்சம் போக்க முன்வந்தார் யாருமில்லை.

பொதுக்கூட்டங்கள், புள்ளி விவர விளக்கங்கள், துண்டறிக்கைத் தாள்கள், தூதுக்குழு அமைப்புகள், பட்டினி ஊர்வலங்கள், அமைச்சர்களுடன் பேட்டிகள் ஆகிய எல்லா முறைகளும் பயனற்றுப் போயின. எந்த முறையாலும் அவர்களுடைய துயரம், துடைக்கப்படவில்லை; வேதனை விலக்கப்படவில்லை; கவலை கலைக்கப்படவில்லை; பசியும் பஞ்சமும் போக்கப்படவில்லை.

தணலிடைப் பட்ட புழுப்போல் துடித்தார்கள் அவர்கள் வானிலே வீற்றிருக்கும் வெண்ணிலாவைப்போல ஆசைமுகம் காட்டி அன்புநகை புரிந்தார்களே தவிர அமைச்சர்கள், அவர்களின் சஞ்சல மேகங்களைப் பஞ்சுபஞ்சாக்கக் கொஞ்சமும் எண்ணமிட்டார்களில்லை.

தங்கள் முறையீடுகள் அவ்வளவும், கெஞ்சுதல்கள் அத்தனையும், விளக்கங்கள் எல்லாமும், வேண்டுகோள்கள் ஒவ்வொன்றும் செவிடன் காதில் ஊதிய சங்கென ஆயினவே தவிர, ஆளவந்தார்கள், தங்களின் குறைகளைத் தீர்க்கத் துளியளவும் முயன்றனரில்லை என்பதை உணரத் தொடங்கியதும், கைத்தறி நெசவாளர்கள், இனி, அஞ்சா நெஞ்சுடன் அறப்போர்க் களத்தில் இறங்குவதைத் தவிர வேறு பாதை தங்கட்குக் கிடையாது என்பதை ஐயம் திரிபு அற அறிந்து கொண்டனர்.

போர்—போர்—அறப்போர் என்று வீரமுழக்கமிட்டனர்.

ஆங்காங்குள்ள கலெக்டர் அலுவலகங்களின்முன் சென்று மறியல் போராட்டத்தைத் தொடங்கினர்.

ஏறத்தாழ முப்பது இடங்களில் போர் இதுபோது மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தடியடி கிடைத்தது சில இடங்களில்--அஞ்சினார்களில்லை நெசவாளர்கள்.

சிறைச்சாலைகள் கூவி அழைத்தன பல இடங்களில்—சிறைவாழ்வு எங்கட்கு நிலாச்சோறு என்றனர் அப்பாட்டாளிகள்.

அடக்குமுறை ஈட்டிகள் அவர்கள் இதயத்தை நோக்கிப் பாய்ச்சப்பட்டன பற்பல சமயங்களில்—ஆஹா தயார் அத்தனைக்கும் என்றனர் அந்த அஞ்சா நெஞ்சர்கள்.

செய்வது இன்னது என்பதை அறியாது சோர்ந்த உள்ளத்துடன் சுருண்டு கிடந்த தறித் தொழிலாளர்களைப் பார்த்து அறப்போர் புரிவதுதான் நம் குறைகளைக் களைவதற்கான அருமையான மார்க்கம் என்ற சிறந்த பாதையைச் சிரித்தமுகத்துடன் ஆனால் உறுதிபடைத்த உள்ளத்துடன் முதன் முதல் எடுத்துக் காட்டிற்று, சேலம்!

நெடுங்கால சுயமரியாதை வீரர்—திராவிட முன்னேற்றக்

(16-ம் பக்கம் பார்க்க)

தொடர் நாடகம்.

# திலோத்தமா

(கு. தனபாலன்.)

## அங்கம் : 24

**இடம் :** வைத்தியன் வீடு.

[கருணாகன், வைத்தியன் வீட்டில் நுழைகிறான்...அருணன் ஒளிந்திருந்து பார்க்கிறான்.. ]

**கரு :** நான் வருகிறேன்...பத்திரம், மூச்சுவிடாதே! இதுவிஷயமாய்...

**வைத் :** என்னங்க ... என்னை அவ்வளவு மோசமா நினைச்சிட்டீங்களே. இந்த விஷயம் வெளியே தெரிஞ்சா, அப்புறம் எனக்கு ஏதுங்க தலை!

**கரு :** ஹா–ம்....ஞாபகமிருக்கட்டும்

[போகிறான்...சிறிது நேரம் கழித்து அருணன் இரகசியமாக வந்து வைத்தியன் முகத்தில் துணியைப் போட்டுக் கட்டிவிட்டு கைகால்களையும் கட்டி ஓர் பையில் போட்டு தன் தோளின்மேல் தூக்கிச் செல்கிறான். வைத்தியன் கூச்சலிடுகிறான். அவனைத் தலையிலடித்து மூர்ச்சையாக்குகின்றான் அருணன்.]

**வைத் :** ஐயோ திருடன்...... திருடன்!

## அங்கம் : 25

**இடம் :** காளிகோயில் சுரங்கம்.

[சிற்பி சிங்காரவேலர் அமர்ந்து ஓர் ஓலைச்சுவடியைப் புரட்டிக் கொண்டிருக்கின்றார். அருணன் வைத்தியனைத் தூக்கி வந்து கீழே போடுகிறான். வைத்தியன் கூக்குரலிடுகிறான். பின்பு பையை அவிழ்த்து அவனைத் தன் தந்தைக்குக் காட்டுகின்றான்.]

**வை :** ஐயோ திருடன்...திருடன்!

**அரு :** சட் முட்டாளே வாயை விடாதே அனாவசியமாய்!

**சிங் :** அருணா, இவன் யார்?

**அரு :** உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்த துரோகிகளில்—இருக்க இடங்கொடுத்த இடத்தில் தீ வைத்த தீயோர்களில்—அரசரின் உப்பைத் தின்று அவரது உயிருக்கே உலை வைத்த உன்மத்தர்களில் இவனும் ஒருவன்! இவன் தான் அரண்மனை வைத்தியன். நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பு! இவன் தந்த விஷத்தினால்தான் அரசர் அன்று அனியாயமாய் மாண்டார். நாளைக்கு நடக்கப்போகும் இளவரசி காஞ்சனாவின் பிறந்த தினக் கொண்டாட்டத்தில் யாவும் பகிரங்கமாக்கப்படும். நாளை விழாவிற்குத் தங்களையும் உடன் அழைத்துவரும்படி மந்திரியாரின் உத்திரவு!

**சிங் :** அப்படியே வருகிறேன்!...

**அரு :** அப்பா இவனை சாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்! நான் வருகிறேன் வணக்கம்.

போய்வா என தலையசைத்தார்.

[போகிறான்.]

## அங்கம் : 26

**இடம் :** வீதி.

[புது ஒளி வேகமாகப் போகிறான், அவனது தோழர்கள் வைதிகமும் வேதாந்தமும் எதிரில் வருகின்றனர்.]

**வேதா :** வணக்கம்! எங்கே அண்ணே அவசரமா புறப்பட்டுட்டே?

**பு. ஒ :** இன்னிக்கி தானேடா நம்ம இளவரசி காஞ்சனா தேவியார் பொறந்த தின கொண்டாட்டம். இன்னிக்கி திலோத்தமாவே நடனம் ஆடப்போறா!

**வைதி :** யாரது...இந்திர லோகத்திலே இருக்கிறாளே அவளையா சொல்றே?

**பு. ஒ :** ஏண்டா...பூர்வ ஜென்ம வாசனை இன்னும் உன்னைவிட்டு போகலையே? நம்ம ராஜகுருவின் மகள் திலோத்தமாவைச் சொன்னா...இந்திர லோகமாம்...இந்திர லோகமாம்...ஆளைப்பாரு...ஆளை!

**வைதி :** கோவிச்சிக்காதே அண்ணே...வாய்தவறி வந்திட்டுது ...அது போகட்டும்......ஏன் அண்ணே நான்கூட வரட்டுமா?

**பு. ஒ :** ஏன் வேணுமின்னா ஜோசியம் ஏதாவது பாத்துகிட்டு வாங்களேன் ரெண்டுபேரும்!

**வேதா :** என்னா அண்ணே... அத்தையெல்லாந்தான் எப்பவோ தொலைச்சி தலைமுழுகிட்டோமே... மறுபடியும், மறுபடியும் அத்தை வேறே சொல்லிகிட்டிருக்கியே!

**பு. ஒ :** அப்படின்னா...சரி புறப்படுங்க போவோம்!

**இரு :** இதோ இப்பவே!

[இவர்களுக்கு அறிமுகமான ஒரு கிழவர் எதிரில் வருகின்றார். அவரைப் பார்த்து மூவரும் வணங்குகின்றனர்.]

**மூவரும் :** அண்ணா...வணக்கம்!

**கிழ :** வணக்கம்!

[போகின்றனர்.]

## அங்கம் : 27

**இடம் :** அரண்மனைக் கொலு மண்டபம்.

**காலம் :** காலை.

[அரசி அஞ்சனா தேவி அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறாள். பக்கத்தில் இளவரசி காஞ்சனா அமர்ந்திருக்கிறாள். மகாராணிக்கு இடதுபுறம் போடப்பட்டுள்ள பொன்னாசனத்தில் ஆலவாயர் ஆடம்பரமே உருவாக . அமர்ந்திருக்கின்றார். மற்றும் பலபிரதானிகள், போர்வீரர்கள் முதலானோர் அவரவர்களின் தகுதிக்கு

ஏற்றபடி அமர்ந்திருக்கின்றனர். திலோத்தமா நடனம் புரிகிறாள், ஒரு மேசைமீது இரண்டு பெரிய குவளைகளில் பானங்கள் ஊற்றப்பட்டிருக்கின்றன. அதற்குப் பக்கத்தில் 6 சிறு குவளைகள் இருக்கின்றன. அவைகளில் ஒரு மூன்று குவளைகள் ஒருவிதமாகவும், மற்ற 3 வேறுவிதமாகவும் இருக்கின்றன. அதாவது விஷம் கலக்கப்போகும் குவளைகளில் மலர்க்கொத்துகள் வர்ணத்தால் தீட்டப்பட்டிருக்கின்றன. மற்ற மூன்றும் தூய வெண்மையாய் இருக்கின்றன. ராஜகுரு ஆலவாயரின் திட்டப்படி சாதாரண அதாவது தூய வெண்மைக் குவளைகளில்தான் நல்ல பானம் இருக்க வேண்டும். மலர்க்கொத்துகள் வர்ணத்தால் தீட்டப்பட்டுள்ள குவளைகளில் விஷம் கலக்கவேண்டும். ஆனால் திலோத்தமா விஷத்தை, [தன் கையிலுள்ள மோதிர டப்பியில் உள்ள விஷத்தை] வேண்டுமென்றே மாறாக கலந்துவிடுகிறாள் நடனமாடிக்கொண்டே! இந்த இரகசியம் மந்திரி மணிவேலருக்கு மட்டும் தெரியுமாதலால் அதை மிகுந்த ஆவலுடன் கவனிக்கின்றார். ராஜகுரு, தன் மகள் தன்னைக் காட்டிக்கொடுக்க மாட்டாளென்ற அகம்பாவத்தால் நாட்டியத்தை ரசித்துக்கொண்டிருக்கின்றார். திலோத்தமா சாமர்த்தியமாக விஷக் குவளைகளை தன் தந்தைக்கும், அரசியாருக்கும், கருநாகனுக்கும், நல்ல குவளைகளிலுள்ள பானங்களை இளவரசிக்கும், மந்திரியாருக்கும், அருணனுக்கும் தருகிறாள். வஞ்சக நெஞ்சினர் விஷமருந்தி தாம் பிறருக்கு வெட்டிய குழிகளில் தாமே வீழ்ந்து மடிகின்றனர். திலோத்தமா தட்டென்று நடனத்தை நிறுத்திவிட்டு தந்தையையும், தாயையும் எண்ணி ஒரு கணம் கண்ணீர் கலங்குகின்றாள். அச்சமயம் அரண்மனை வைத்தியனைப் பின்கட்டாகக் கட்டி, அருணன், சபையின்முன் நிறுத்துகின்றான். சிங்கார வேலரும் உடன் இருக்கின்றார். இளவரசியும், குடிமக்களும் உண்மை உணராது குழப்பமடைகின்றனர். மணிவேலர் மக்களை அமைதியாய் இருக்கும்படி சாடைகாட்டிப் பின்வருமாறு விளக்கம் உரைக்கின்றார்........]

**மணி:** வணக்கம்! அன்பு மக்களே, வீணாகக் குழப்பமடைய வேண்டாம். இதோ மடிந்து போன மூவரும் ராஜத்துரோகிகள்.

**எல்லோரும்:** ஆ......என்ன.....என்ன...!!

**மணி:** ஆம், ஆச்சரியமாகத்தான் தெரியும் உங்களனைவர்க்கும்! அரசரை அன்று கொலை செய்தவர்கள் இதே சண்டாளர்கள்தான். பின்பு, இன்று என்னையும் இளவரசி காஞ்சனா தேவியாரையும் பொதுநலத்தொண்டன்— தன்னலமற்ற தர்மவீரன் அருணனையும் சூதாக விஷம் தந்து கொலை செய்யத் திட்டமிட்ட தீயோர்களும் இவர்களே. அரசரது கொலைக்கும், இன்றைய கொலைகளுக்கும் விஷமளித்தவன் இதோ இந்த நன்றிகெட்ட நயவஞ்சகன்தான். (வைத்தியனை சுட்டிக்காட்டி) இந்த நாட்டுக்கு வந்த பெரிய ஆபத்துகளைப் போக்கத் தன்னுயிரையும் பொருட்படுத்தாமல் — நீதிக்குப் புறம்பாகப் போகாமல், தன் தந்தையென்றும் பாராது ஆதிமுதல் இதுவரை ஓயாமல் உழைத்த உத்தமி இதோ இந்த திலோத்தமாதான். திலோத்தமா பெண்களின் பெருமைக்கு, பொறுமைக்கு, வீரம்— அறிவு — ஆற்றல் — அஞ்சாமை யாவற்றிற்கும் எடுத்துக்காட்டு. அவர்களுக்கு நான்மட்டுமல்ல ஏன் இந்நாடே தலைவணங்கக்கடமைப் பட்டுள்ளது. இரண்டாவதாக இதோ நிற்கும் வீரர் திலகம் அருணனுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்களாவோம். (வைத்தியனைக்காட்டி) இவனைக் கொண்டுபோய்ப்பாதாளச் சிறையில் அடையுங்கள். [காவலர் இழுத்துச் செல்கின்றனர்).

**குடிமக்கள்:** திலோத்தமா!........ வாழ்க [மும்முறை.]

**மணி:** இன்று ஓர் நன்னாள். அதர்மம் அழிந்து தர்மம் தழைத்தோங்கும் நாள். இந்த நன்னாளில் ஓர் நல்ல செய்தியை உங்களுக்கறிவிக்கின்றேன். இனி இம்முல்லைநாட்டுக்கு மன்னர் திருவாளர் அருணன் ஆவார்கள். அவர்களுக்கும், இளவரசி காஞ்சனா தேவியாருக்கும், இளவரசியாரின் விருப்பப்படி திருமணம் வெகு விரைவிலேயே நடைபெறும். அந்நாளை ஊரெங்கும் விமரிசையாகக் கொண்டாடுவோமாக...!

[பொதுமக்கள் பூரிப்படைகின்றனர்.]

**அரு:** தோழர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! உங்களுக்கு என் முதற்கண் வணக்கம் உரித்தாகுக. நான் அரசனாக வாழ விரும்பவில்லை. என்றும் போல் உங்களின் தொண்டனாகவே இருந்து உங்களுக்கு யாதொரு குறைவும் வாராதபடி பார்த்துக் கொள்வதே என் கடமையாகக் கொண்டு இந்த ஆட்சியை உங்களுக்குத் தலைவன் என்ற முறையில் நடத்துவேன். இனிமேல் இந்நாட்டில் வீணர்களுக்கு வேலையில்லை. நாட்டை மாற்றானுக்குக் காட்டிக் கொடுத்துக்கைக்கூலி வாங்கும் பதவிப் பன்னாடைகளுக்கு இனி இங்கு வேலை இல்லை. அன்னமிட்ட வீட்டில் கன்னம் வைக்கும் கயவர்களுக்கு இனி இடமில்லை! அத்தகையோரை அழியுங்கள். அவர்கள் விலா எலும்புகள் நொறுங்க அடித்து விரட்டுங்கள். அவர்களின் வர்க்கமே பூண்டற்றுப் போகட்டும்! அதற்காக நாம் ஒவ்வொருவரும் தளராமல் உழைத்து சாந்தியாக, சந்தோஷமாக வாழ்வோம். அதுவே என் வாழ்க்கையின் மூச்சு என்பதை உங்களிடம் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**குடிமக்கள்:** அருணர்.....வாழ்க! காஞ்சனா தேவியார்......வாழ்க!
[மும்முறை]

## அங்கம்: 28

**இடம்:** அரண்மனைத் தோட்டம்.

[அருணனுக்கும், இளவரசி காஞ்சனாவுக்கும் மணம் முடிந்த சில நாட்களுக்குப் பின் ஓர் நாள் இருவரும் ஆனந்தமாய் கைகோத்துக் கொண்டு நந்தவனத்தில் உலவிக்கொண்டு வருகின்றனர். எதிரே திலோத்தமா புத்த சன்னியாசினியைப் போல் உடை அணிந்து பாடிக்

(12-ம் பக்கம்பார்க்க)

# இன்ப வாழ்வு அவர்களுக்கு! துன்ப நிலைமை நமக்கா?

## வடஇந்தியாவில் ஆநந்தம்! தென்னிந்தியாவில் அழுகுரலா?

## இதற்குப் பெயர்தான் அகில இந்தியக் கட்டுப்பாடா?

—(*)—

### கேட்பது நாம் அல்ல
### தேசிய வட்டாரம்

★

“தென்னிந்தியா, தன்னுடைய தேவையைவிட அதிகமான அளவுக்கு நூலினை உற்பத்தி செய்தும் கூட இதுபோது தன்னுடைய தேவைக்கே போதுமான அளவு நூல் கிடைக்காமல் தத்தளிக்கிறது.

“இந்தத் தத்தளிப்புக்கான காரணம், நம்முடைய நூல், அகில இந்தியக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு இந்த நூலினை விநியோகிக்கும் உரிமை டில்லி ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பது தான்.

“இந்த அகில இந்தியக் கட்டுப்பாடுதான் தென்னாட்டு நெசவாளர்கள் இலட்சக் கணக்கானவர்களைப் பட்டினிப் பட்டாளங்களாக மாற்றியிருக்கிறது.

“இந்த அகில இந்தியக் கட்டுப்பாடுதான் தென்னாட்டு நெசவாளர்களை மாதத்தில் 26 நாட்களுக்கு வேலையில்லாமல் வேதனைப் படும் விபரீத நிலைமைக்கு உள்ளாக்கியிருக்கிறது.

“இந்த அகில இந்தியக் கட்டுப்பாடுதான் தென்னாட்டு நெசவாளர்களைப் பட்டினி போட்டுவிட்டு வட இந்தியாவைக் கொழுக்க வைக்கும் இன்றைய நிலைமைக்குக் காரணமாக இருக்கிறது.

“எனவே, இனி நாம் இந்த அகில இந்தியக் கட்டுப் பாட்டிற்கு உட்பட்டிருக்கக் கூடாது.

“சென்னை மாகாணத்தில் உற்பத்தியாகும் நூலை சென்னை மாகாண மக்களிடமிருந்து டில்லி ஆட்சியாளர்கள் பறித்துக் கொண்டு போகும் இந்த வழக்கம் முற்றிலும் தவறானது ஆகும்.

“இனியாவது, சென்னை, தன்னிடத்திலே உற்பத்தியாகும் நூலை, தன் நெசவாளர்களுக்குப் பயன் படுவதற்காகவென்று சென்னையிலேயே நிறுத்திக்கொள்ள வேண்டும்.”

* * * *

மேலே பொறிக்கப் பட்டுள்ள வாசகங்களை எடுத்து வீசியிருப்பர், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அல்ல, திராவிடர் கழகத் தலைவருமல்ல — ஒரு காங்கிரஸ்வாதி! சாதாரண காங்கிரஸ் வாதிகூட அல்ல, சட்டசபை உறுப்பினர்! ஆந்திர கேசரி என்று அளவற்ற ஆனந்தத்துடன் பாரத புத்திரர்களால் போற்றப்படும் பிரகாசம்காருவின் வலது கரம் போன்றவர்! ஆந்திர காங்கிரஸ் வட்டாரத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்பவர்! பெயர், தென்னேட்டி விஸ்வநாதம்!

பேசியிருப்பவர் தென்னேட்டி விஸ்வநாதம்தான் ஆனால் பேசியிருக்கும் முறையோ திராவிட இயக்க முறை!

வடநாடு பட்டணமாக, தென்னாடு பட்டிக்காடாவதா?—திராவிட இயக்கம் கேட்டது.

வடநாடு உண்டு கொழுக்க, தென்னாடு சுருண்டு மடிவதா?—தென்னேட்டியார் கேட்கிறார்!

ஒரே ஒரு வேறுபாடு!

திராவிட இயக்கம் பத்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே இந்தக் கேள்வியை எழுப்பிவிட்டது.

ஆனால் தென்னேட்டியார் இன்றுதான் இந்தக் கேள்வியை எழுப்புகிறார்.

நாம் முன்பே கேட்டோம்.

அவர், இன்றுதான் கேட்கிறார்,

நாம் நெடுங்காலமாகக் கேட்டு வருவதைத்தான் அவர் கேட்கிறார் இன்று! ஆதலே, அவர் கேட்கும் பொருளிலே புதுமை எதுவும் இல்லை, ஆனால் அவர் கேட்கிறார் —அதுதான் முக்கியம்.

அவர் என்றால், அவர் ஓர் காங்கிரஸ் காரர் என்பது மட்டுமல்ல கவனிக்கப்படவேண்டியது, அவர்

(16-ம் பக்கம் பார்க்க)

# எப்படி வாழ்வது என ஏங்குகின்றனர் முப்பது இலட்சம் கைத்தறி நெசவாளர்கள்!

## திராவிட நாடெங்கணும் திகைப்பும் தேம்பலும்!

## வாழப் பிறந்தவர்கள் வதைபடும் விபரீதம்!

### கண்களிலே நீர்! உளத்திலே வேதனை!

### இல்லத்திலே வறுமை! கையிலே துயரம்!

### கண்ணீர்க் கடலாகிறது கைத்தறி நெசவாளர் உலகு!

**வெள்ளை என்ற முத்துசாமி**, வயது 45. தகப்பனார் பெயர் தவசியாகந்தம் கூலிக்கு நெய்தவர். புளியம்பட்டி ராஜாகுடி தெருவில் 14—15—44 எண்ணுள்ள இல்லத்தில் குடியிருந்தவர், பார்வதியம்மாள் என்ற அருமை மனைவியையும், அமச்சியார், மீனாட்சி, பார்வதி என்கிற மூன்று பெண் குழந்தைகளையும் நடுத் தெருவில் தவிக்கவிட்டு, நகருக்குத் தென்புறமுள்ள மலையரசன் கோவில் கிடங்கில் நிரம்பிய நீர் நிலையில் விழுந்து உயிரை மாய்த்துக்கொண்டார். நகராட்சி மன்றத்தார் அனாதைப் பிணமாக எடுத்து அடக்கம் செய்தனர்.

*　　*　　*

**நூல்கடை சங்கையா** வயது 50. தகப்பனார் பெயர் பெருமாள். பாவுத்தோய்தல், தொழில். புளியம்பட்டி ரஸ்தாதெரு 42—1—4 எண் வீட்டிற்குப் பின்புறத்தில் வசித்தவர். ஒரு காலத்தில் நல்ல நிலைமையில் இருந்தவர். வாழ்க்கைப் போரில் தோல்வி கண்டவர். இரண்டு மக்களைத் தவிக்கவிட்டு, சாலியர் பாவடித் தோப்புக்குப் பக்கத்திலிருக்கும் பழநியாண்டவன் கோவில் முன்மண்டபத்தில் பட்டினியால் பலிகொள்ளப்பட்டார்.

*　　*　　*

**சுப்பிரமணியம்**. வயது 50. தகப்பனார் பெயர் கற்பகம். சொந்தத் தறிநெய்தவர். தில்லை மாகாளியம்மாள் என்கிற காதல் மனைவியையும், கலிசிவலிங்கம், நாகராசன் ஆகிற இரண்டு ஆண் மக்களையும், புண்ணியாவு என்கிற பெண் குழந்தையையும் திக்கின்றித் தவிக்கவிட்டுப் பட்டினிக்கு இரையானார்.

*　　*　　*

**பொன்னம்மாள்**. வயது. 35. தகப்பனார் பெயர் சங்கரலிங்கம். கணவனார் பெயர் மூத்துச்சாமி. சொந்தத் தறிநெய்தவர். மகாராஜபுரம் தெரு 45—1—13 எண்ணுள்ள வீட்டில் வசித்தவள். சுப்பிரமணியம், கந்தசாமி என்கிற இரண்டு ஆண் மக்களையும், கண்ணில்லாத் தன் கணவரையும் கதிகலங்கவிட்டுப் பசிப் பிணியால் மாண்டாள்.

*　　*　　*

**திருநாவுக்கரசு**. வயது 40. தகப்பனார் நாராயண மூப்பனார். சொந்தத் தறிநெய்தவர். முருகன், நாராயணன், செண்பகவல்லி என்னும் மூன்று மக்களையும் துடிதுடிக்க விட்டுவிட்டு, வறுமையும் பசியும் வாட்டி வதைக்க, திருப்பரங்குன்றம்போய் அங்குள்ள சாலியர்கள் பொதுமடத்தில் பசி நோயுடன் போராடி மடிந்தார். திருப்பரங்குன்றம் பஞ்சாயத்துப் போர்டார் அனாதைப் பிணமாக அடக்கம் செய்தனர்.

*　　*　　*

**காந்தி என்ற சங்கரலிங்கம்**. வயது 45 இவரும் நெசவுத் தொழிலாளிதான். தகப்பனார் பெயர் கந்தசாமி. சிதம்பர ராஜபுரம் தெரு 15—4—29 எண் வீட்டில் இருந்தவர். மாரிமுத்து என்கிற மைந்தன் வாடித்தவிக்க, பசிநோய்க்கு மருந்தின்றி மாண்டார்.

*　　*　　*

**மீனம்மாள்**: வயது 30. நெசவுத்தொழிலாளி. கணவர், வீரப்பன் செட்டியார். 11 வயதுடைய் வீரம்மாள், 9 வயதுடைய வீரப்பன் ஆகிய இரண்டு மக்கள் உண்டு. தொழில் பஞ்சம் ஏற்பட்ட காரணத்தால், கணவர் வீரப்பன் செட்டியார் சென்ற திசை தெரியவில்லை. குடும்பம் பட்டினிப் போர்க்கு இரையாகி; 4-1-51 ம் தேதி, தன் இரு குழந்தைகளும் கதறக் கதற மாண்டுபோனார் மீனம்மாள்.

*　　*　　*

**சோரம்மாள்**. வயது 30 கணவர் ஏற்கனவே காலமாகி விட்ட சங்கரன் செட்டியார். நெசவுத் தொழிலில் ஏற்பட்ட மந்தத்தால் 4-1-51 அன்று பட்டினிச்சாவுக்கு இரையானார் இந்த அம்மையார்.

*　　*　　*

**பொன்னு**. கைத்தறி நெசவாளி. தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள பஞ்சம், 2-2-51 அன்று, இவரை, மரணப் பள்ளத்தில் வீழ்த்திவிட்டது. இவருடைய குடும்பம் வாழ வழியறியாது தத்தளிக்கிறது.

*　　*　　*

கல்நெஞ்சையும் கரையவைக்கும் இத்தகு செய்திகள் அடுக்கடுக்காக வந்தபடி இருக்கின்றன அருப்புக் கோட்டை வட்டாரத்திலிருந்து!

**அருப்புக் கோட்டை**, ஏறத்தாழ பன்னிரண்டாயிரம் கைத்தறிகளையும், அந்தத் தறிகளையே தங்கள் வாழ்க்கை வழிகள் என நம்பிக் கிடக்கும் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் ஓர் வட்டாரம்.

**அருப்புக் கோட்டை**, இலங்கை, பர்மா, மலேயா, பாகிஸ்தான் போன்ற பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஆடை வகைகளை அதிகமாக நெய்து கொடுக்கும் சிறந்ததோர் பகுதி.

**அருப்புக் கோட்டை**, "அண்டினவரை ஆதரிப்பது அருப்புக் கோட்டை" என்பதாக ஓர் பழமொழியே நாட்டில் நடமாடும் அளவுக்குக் கைத்தறித் தொழிலில் சிறப்புற்று, வந்தவர்க்கெல்லாம் வகையுற வாழும் வழிகளை வகுத்தளித்து வந்த பட்டணம்.

அருப்புக் கோட்டை இவ்வளவு சிறப்பும் செழிப்பும் மிகுந்ததோர் வட்டாரம்தான். ஆனால் அந்த வட்டாரத்தில்தான், சென்ற இரண்டு மாத காலத்திற்குள்ளாக ஒன்பது கைத்தறி நெசவாளர்கள் பட்டினியால் தாக்குண்டு மரணத்தால் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

**முத்துசாமி**
**சங்கையா**
**சுப்பிரமணியம்**
**பொன்னம்மாள்**
**திருநாவுக்கரசு**
**சங்கரலிங்கம்**
**மீனம்மாள்**
**சோரம்மாள்**
**பொன்னு**

இந்த ஒன்பது நெசவாளர்களையும் இன்று நாம் காணமுடியாது அருப்புக் கோட்டையில். அவர்கள், நாமெல்லாம் காணமுடியாத இடத்துக்கு, ஒருக்கால் காணமுடிந்தாலும் திரும்பிவந்து கூறமுடியாத இடத்துக்குச் சென்று விட்டார்கள்.

அவர்கள் போய்விட்டார்கள்—போனவர் மீளாத இடத்துக்கு, யாரும் போக விரும்பாத இடத்துக்கு, எண்ணிப் பார்த்தாலே உள்ளத்தில் அச்சத்தை மூட்டும் இடத்துக்குப் போய் விட்டார்கள்,

கண்டவர், விண்டிலர்! விண்டவர், கண்டிலர், என்கிறார்களே, அந்த அதிசயபூமிக்கு, அந்த அற்புதமான பிரதேசத்துக்கு, அந்த அதி ஆச்சரியமான வட்டாரத்துக்கு அவர்கள் சென்றுவிட்டார்கள்.

இனி நாம் கதறியழுதாலும் கோவெனக் கூவினாலும் கண்ணீர் பெருக்கினாலும் அலறித் துடித்தாலும் அவர்கள் திரும்பமாட்டார்கள்—திரும்பிவந்து முன் போல நம்மிடம் நடமாடமாட்டார்கள்.

வாழப் பிறந்தவர்கள் அவர்கள். ஆனால் தமிழகத்தில் அவர்கள் சாகத்தான் முடிந்தது' வாழமுடியவில்லை. அவர்கள் வாழ வழி வகுக்கவில்லை தமிழகம்.

அவர்கள் ஒன்பது பேரும் தமிழன்னை பெற்றுத் தந்த தவப் புதல்வர்கள்தான். செந்தமிழகத்தின் ஆசைக் குழந்தைகள்தான். சேர சோழ பாண்டியர்தம் வழி வழி வந்த வண்டமிழ் மரபினர்தான். என்றாலும் அவர்களுக்கு வாழ இடமில்லை இப் பரந்த தமிழகத்தில்! வாழ வழி கிடைக்கவில்லை இம் முத்தமிழ் மண்டலத்தில்!

தமிழ்மகன் ஒவ்வொருவனையும் வெட்கத்தால் தலை குனிந்துகொள்ளும்படி செய்யும் விபரீதம் கலந்த வேதனைமிகு செய்தி இது!...............

ஆனால் ஒன்று! அவர்கள் ஒன்பது பேருமாவது எப்படியோ மாண்டு மறைந்துவிட்டார்கள். எனவே அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் உயிரோடு உலவிக்கொண்டிருந்தபோது அவர்களை வாட்டி வதைத்துக்கொண்டிருந்த வாழ்க்கைத்துயரம் இனி அவர்களை வதைக்கமுடியாது.

ஆனால் இன்னமும் உயிரோடு உலவிக்கொண்டிருக்கிறார்களே அதே அருப்புக் கோட்டையில் வேறு நெசவாளிகள் ஆயிரமாயிரவர், அவர்களை நினைக்கும் போதுதான் நம் நெஞ்சு பிளந்துவிடும்போலாகிவிடுகிறது—அவ்வளவு துயரம்; அவ்வளவு வேதனை, அவ்வளவு சஞ்சலம் நிறைந்தது அவர்களுடைய இன்றைய வாழ்வு—வாழ்வா அது—அல்ல—உயிரோடுள்ள மரணநிலை!

அருப்புக்கோட்டையில் உள்ள ஆயிரமாயிரம் நெசவாளிகள் அத்தனைபேரும் சென்ற ஆறுமாத காலமாக எப்படியோ தங்கள் உயிரோடு உடலை ஒட்டவைத்துக் கொண்டு உலவிவருகிறார்கள் என்றுதான் கூறமுடியுமேதவிர, வாழ்ந்துவருகிறார்கள் என்று கூற முடியாது.

வாழ்க்கை அல்ல அவர்கள் வாழ்ந்து வருவது—மரணமும் அல்ல அது—மரணம் பாதி வாழ்க்கைபாதி என்று சொன்னாலும் பொருத்தமாகத் தோன்றவில்லை—செத்த வாழ்வு என்று வேண்டுமானால் கூறலாம்—அந்தச் சொற்றொடர்தான் ஓரளவுக்காவது அவர்களுடைய நிலைமையை உள்ளது உள்ளபடி உணர்த்தும் ஆற்றல் படைத்ததாகக் காணப்படுகிறது.

சில நாட்களில் முழுப் பட்டினி, சில நாட்களில் அரைப் பட்டினி, சில நாட்களில் முக்காற் பட்டினி என்ற வகையாகத்தான் அவர்களுடைய உணவுநிலையைச் சித்தரிக்க முடியுமே தவிர ஒரு நாளாவது அவர்கள் முழு உணவை உண்டு களித்து உல்லாசமாக இருந்தார்கள் என்று கூற முடியாது.

முழு உணவு! அந்தச் சொற்றொடர் அவர்களுடைய அகராதியை விட்டு அகன்று ஆறு மாதங்கள் முடிந்து விட்டன.

எப்படியோ வாழ்கிறார்கள்! ஏனோ வாழ்கிறார்கள்! ஏதோ வாழ்கிறார்கள்!. என்னமோ இருக்கிறார்கள்!—இப்படியெல்லாம்தான் அவர்களைப் பற்றிப் பேச முடியும்.

"அவர்களுக்கென்ன? நலமாக இருக்கிறார்கள்!"—இப்படி, ஒருபோதும், அவர்களைப் பற்றி உரையாட முடியாது.

பசி, பஞ்சம், பட்டினி, பரிதாபம்—இந்த நான்கு சுவர்களுக்கிடையே உள்ள இடத்தில்தான் அவர்களுடைய வாழ்க்கை நடமாடி வருகிறது இந்த ஆறுமாத காலமாக.

எழில், இன்பம், திருப்தி, எக்காளம்—இந்த நான்கு எல்லைக் கோடுகளுடன் அமைந்துள்ள உல்லாசப் பூங்

காலை எட்டியும் பார்க்கமுடியவில்லை அவர்களுடைய வாழ்க்கையால்.

அருப்புக்கோட்டையில் இந்த நிலை! ஆனால் அருப்புக்கோட்டையில் மட்டும்தானா இந்த நிலை? இல்லை—இல்லை! சேலத்தில், இராசிபுரத்தில், திருச்செங்கோட்டில், திருவில்லிபுத்தூரில், சங்கரன் கோவிலில், சில நாயக்கன்பட்டியில், உறையூரில், துறையூரில், மதுரை நகரத்தில், இடைப்பாடி கிராமத்தில்—வரிசை வரிசையாக ஊர் பெயர்களை அடுக்கிக்கொண்டே போவானேன்—தமிழ்நாடு முழுதிலும் எங்கெங்கே கைத்தறி நெசவாளர்கள் உலவுகின்றனரோ அங்கெல்லாம் இதே நிலைதான்!

'தமிழ்நாடு முழுதிலும்' என்று சொன்னோம்—ஆனால் நினைத்துப் பார்த்தால் அதுகூட அவ்வளவு பொருத்தமான சொற்றொடராகத் தோன்றவில்லை—திராவிட நாடு முழுதிலும் என்று சொல்லவேண்டும்—அப்படிச் சொன்னால்தான் உள்ள நிலையை உள்ளபடி விளக்குவதாக ஆகும்—ஏனெனில் பசியும் பட்டினியும் பரிதாப வாழ்வும் தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களை மட்டும் பதம் பார்த்துவிட்டு ஆந்திர நாடு முதலிய திராவிடத்தின் பிற பகுதிகளில் உள்ள நெசவாளர்களைத் தீண்டவும் அஞ்சி ஒதுங்கி ஓடிவிட்டன என்று கூறமுடியாது. குண்டூரிலும் நெல்லூரிலும் சீராளாவிலும் இராயலசீமாவிலும் வாழ்கின்ற நெசவாளரிடையே ஏற்பட்டுள்ள நெருக்கடி, தமிழகத்து நெசவாளரிடையே உருவாகியுள்ள நெருக்கடியைவிட எள்ளளவும் குறைவானதல்ல!

திராவிட நாடு முழுதிலும் உள்ள **முப்பது இலட்சம் கைத்தறி நெசவாளர்கள்**, சென்ற ஆறுமாத காலமாக, சோகசித்திரங்களாகத்தான் இருந்துவருகிறார்கள். அவர்களுடைய வாழ்வும் 'உயிரைக் கொன்று தின்னும்' பாலைவனமாகத்தான் இருந்துவருகிறது.

கண்களிலே, நீர்!
உள்ளத்திலே, வேதனை!
இல்லத்திலே, வறுமை!
வாழ்க்கையிலே, துயரம்!

இதுதான் திராவிட நாட்டு நெசவாளர் உலகின் நிலைமை

அழுத கண்ணும் சிந்திய மூக்கும் என்பார்களே அப்படிப்பட்ட நிலையிலேதான் நெசவாளி இருந்திருக்கிறான் இந்த ஆறுமாதமும்! இன்னமும் அப்படித்தான் இருக்கிறான்! உவமானத்திற்காகக் கூறுகிறோமில்லை, உண்மையாகவே அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகத்தான் இருந்துவருகிறான் நெசவாளி.

வாழ்க்கை வாழ்வதற்கே என்கிறார்கள். ஆனால் கைத்தறித் தோழர்களைப் பொறுத்தவரை வாழ்க்கை வாடுவதற்கே என்று கூறுவதுதான் அதிகப் பொருத்தமாக இருக்கும். அவ்வளவு வாடி இருக்கிறார்கள் அவர்கள்—இன்னமும் வாடி வதங்கி சுருண்டு வீழ்ந்தபடிதான் இருக்கிறார்கள்.

இன்பத்தின் எல்லையாக இருந்தாகவேண்டிய வாழ்க்கை, நெசவாளர்களைப் பொறுத்தவரை, துன்பத்தின் வடிவமாக மாறிப் போயிருப்பதற்குரிய காரணம் என்ன?

இதோ யாரோ சிலர் வருகிறார்கள்—வருகிறார்கள் என்றால் சும்மாவா வருகிறார்கள்—இல்லை! ஏதேதோ சொற்களை உதிர்த்தபடி வருகிறார்கள் — எதைப் பற்றியதாக இருக்கும் அச் சொல்லாடல்?—கேட்டுத்தான் பார்ப்போமே!

இவர்கள் சொல்கிறார்கள்:—

"சென்ற சில மாதங்களாகக் கைத்தறி நெசவாளர் வாழ்க்கை கடுந்துயர் நிரம்பியதாக மாறியிருக்கிறது. இதற்குக் காரணம், இவர்கள் ஆடை நெய்வதற்குத் தேவையான மூலப் பொருளாகிய நூல், போதுமான அளவுக்கு இவர்களுக்குக் கிடைக்காததுதான். இப்போது இவர்களுக்கு ஆட்சியாளர்களால் ஒரு மாதத்திற்கு என்று கொடுக்கப்பட்டு வரும் நூல், ஒரு மாதத்தில், ஐந்து நாட்களுக்கு மட்டும்தான் போதுமானதாக இருக்கிறது. எனவே மிச்சமாக உள்ள இருபத்தைந்து நாட்களும் நெசவாளர்கள் வேலையில்லாமல் வீண்பொழுதுதான் போக்கவேண்டியிருக்கிறது. ஐந்துநாள் வேலை மூலம், எப்படிப் பார்த்தாலும், பத்து ரூபாய்க்குமேல, இவர்கள் ஊதியம் அடைய முடியாது. மாத ஊதியம்—பத்து ரூபாய்! இந் நிலையில், இவர்கள் வாழ்வு வேதனை நிரம்பியதாக இருக்கிறது என்றால் அதிலே வியப்பென்ன இருக்கிறது?"

கைத்தறி உலகு, கண்ணீர்க் கடலாகியிருப்பதற்கான காரணத்தை இவ்வளவு தெளிவாக எடுத்துக் காட்டி, விளக்கம் தருகிறார்களே யார் இவர்கள்?

கொஞ்சம் கூர்ந்து கவனிப்போமா? கவனித்துப் பார்த்தால், எல்லோரும் சட்டசபை உறுப்பினர்கள் போல காணப்படுகிறார்கள் அல்லவா?

ஆமாம்— சென்னை சட்டசபை உறுப்பினர்கள் தான் அத்தனை பேரும்—எல்லோருமே கதர் சட்டை அணிந்தவர்கள்தான்! இவர்கள் பெயர் வேண்டுமா?

வி. எஸ். சங்கர சுப்பிரமணிய முதலியார்
டி. எஸ். பட்டாபிராமன்
ஏ. ஜே. அருணாசலம்
கே. டி. கோசல்ராம்
ஆர். குப்புசாமி
பி. கந்தசாமி.

இவைதான், இவர்கள் திருநாமம்!

தறித் தொழில் புரிவோருக்குத் தேவையான அளவு நூலினை ஆளவந்தார்கள் அளிக்கத் தவறியதுதான் நெசவாளர் உலகில் மூண்டுள்ள நெருக்கடிக்கான மூலகாரணம் என்பதை இவர்கள் இவ்வளவு அழுத்தந் திருத்தமாக எடுத்துக்காட்டியிருந்தும் சீறிடும் சிவஞானங்களின் சுடுசொல் அம்பு இவர்களைத் தாக்கவில்லை. காரணம், இவர்கள் காங்கிரஸ் வாதிகள்! ஆனால் இந்த கருத்துரையை நாம் கூறிவிட்டால் மட்டும் கோபம் குமுறிஎழுகிறது அந்தத் "தமிழ் முரசு"களுக்கு! என்னென்பது அவர்களின் போக்கை!!

அவர்கள் இருக்கட்டும் ஓர் புறம்—அவர்களைத்தான் நாடே கவனிக்க மறுத்துவிட்டதே! நாம் மட்டும் ஏன் கவனிக்கவேண்டும்?—அதோ வானொலியிலே, சென்னைக் கைத்தொழில் அமைச்சர் தோழர் பெருமாள் சாமி ரெட்டியார் சொற்பொழிவாற்றுகிறார்—சற்று செவிமடுப்போம்.

"சென்ற சில மாதங்களாக சென்னை மாகாணத்துக் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் நூல், மாதத்தில் ஆறு அல்லது ஏழு நாட்களுக்கு மட்டும்தான் போதுமானதாக இருக்

கும். மாதம் முழுவதும் வேலை இருந்துவந்த போதே அவர்களுக்கு மாதம் ரூ, 30 தான் ஊதியம் கிடைத்துவந்தது. ஆனால் இப்போதோ அதில் பாதிதான் கிடைக்கமுடியும்."

கைத்தறி நெசவாளர்களுக்குக் கிடைக்கும் நூல், காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் கணக்குப்படி பார்த்தால், மாதத்தில் 5 நாட்களுக்குத்தான் போதும் என்றும், அமைச்சர் பெருமாள்சாமியார் கணக்குப்படி பார்த்தால், 6 அல்லது 7 நாட்களுக்குத்தான் போதும் என்றும் தெரிகிறது. இருக்கட்டும்! இதோ, வேறு ஒரு குரல் கேட்கிறது—தொலைதூரத்தில் உள்ள ஆமதாபாத் நகரிலிருந்து கேட்கிறது—குரல் எழும் இடம் வட இந்தியாவாக இருக்கிறதே தவிர குரலின் தன்மையைப் பார்த்தால் அது யாரோ ஒரு தென்னிந்தியருடையதாகத்தான் இருக்கவேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது—என்னதான் கூறப்போகிறது இந்தக் குரல்—இதையும்தான் சற்று நின்று கேட்போமே!

குரல், கூறுகிறது:—

"இதுபோது, தென்னிந்தியாவில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. அவர்களுக்குத் தரப்படும் நூல் மாதத்தில் ஆறு நாட்களுக்குத்தான் அவர்களுக்குப் போதுமான வேலையைத் தருகிறது. மற்ற 24 நாட்களும் அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில்தான் சிக்கித் தவிக்கிறார்கள்."

நாம் அடிக்கடி கேட்டுப் பழகிய குரல்! இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் வீற்றிருந்த இடத்தில் இப்போது அமர்ந்திருக்கும் "பேறு" பெற்றிருக்கும் "போர்வாளர்" குரல்! ஆமாம்! அன்பர் ஆச்சாரியார் குரல்தான் இது!

இது, வடநாட்டிலே எழுந்த ஒரு தென்னாட்டுக் குரல்! இதே நேரத்தில், தென்னாட்டிலே எழுந்தது ஒரு வடநாட்டுக் குரல்! அந்தக் குரலும் சும்மாவா இருந்தது, பேசத்தான் செய்தது! குரல் இருப்பதே பேசுவதற்குத் தானே!! அதிலும் அமைச்சர்கள் குரல், ஏசவும் பேசவும் மட்டும்தான் பயன்பட வேண்டும் என்றல்லவா இந்த நாட்டில் கருதப்படுகிறது!!

இந்த அமைச்சர் பெயர், ஹரிகிருஷ்ண மேதாப்!

இவர் கூறுகிறார்:—

"கைத்தறி நெசவாளர்களின் நிலை இப்போது மிகவும் நெருக்கடியானதாகத்தான் இருக்கிறது. அவர்களுடைய இன்றைய நிலையை உள்ளத்தை உருக்கும் தன்மை படைத்த எழுத்தோவியமாகத் தீட்டிக் காட்டலாம் எளிதில். உண்மையிலேயே அவ்வளவு நெருக்கடியான கட்டத்தில்தான் நிறுத்தப் பட்டிருக்கிறார்கள் நெசவாளர்கள் இன்று.

"நெசவாளர்களுக்குச் சென்ற சில மாதங்களாகப் போதுமான அளவு நூல் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, பல நெசவாளர்களுக்கு நூல் கொஞ்சங்கூடக் கிடைக்கவில்லை என்பதும் உண்மைதான்.

"அதிர்ஷ்ட சாலிகளான ஒரு சிலருக்குத்தான் ஏதோ கொஞ்சம் நூல் கிடைத்திருக்கிறது.

"அந்த சொற்ப நூல்கூட அப்படிக் கிடைத்தவர்களுக்கு ஒரு வார காலத்திற்குத்தான் வேலை செய்யப் போதுமானதாக இருக்கும்.

"நெசவாளர்களுக்கு சொந்த நிலமோ தறித் தொழில் தவிர வேறு வழியில் ஊதியம் பெறுவதற்கான வழியோ ஒன்றுமே கிடையாது.

"தறித் தொழிலிலோ வேலை இல்லை—வேறு வகையான பணவருவாயோ துளியுமில்லை. இந்நிலையில் கைத்தறி நெசவாளி கடுந்துயர் அடையாமல் எப்படி இருக்க முடியும்?"

**ஹரி கிருஷ்ண மேதாப்**
**இராஜகோபாலாச்சாரியார்**
**பெருமாள்சாமி ரெட்டியார்**
**ஆறு காங்கிரஸ் எம். எல். ஏக்கள்.**

இந்த நான்கு சாராரின் கருத்துரைகளை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மூன்று உண்மைகள் தெளிவாகத் தெரிகின்றன.

1. திராவிட நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை, இதுபோது, வேதனையின் வடிவமாக இருக்கிறது.

2. இந்த வேதனையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்குமுரிய காரணம், நெசவாளர்களுக்குப்போதுமான அளவு நூல் கிடைக்காததுதான்.

3. நெசவாளர்கட்குப் போதுமான அளவு நூலைத் தந்திருக்க வேண்டியது ஆளவந்தார்களின் கடமை. அவர்கள் அந்தக் கடமையிலிருந்து தவறிவிட்டனர்.

* * *

தென்னாட்டு நெசவாளர்களின் வாழ்க்கை வேதனை நிரம்பியதாக இருக்கிறது என்பதும், அந்த வேதனைக்குக் காரணம் போதுமான அளவு நூல் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதும் உண்மைதான். ஆனால் இந்த நூல் பற்றுக்குறைக்குக் காரணம், ஆளவந்தார்கள்தான் என்கிறீரே அதுமட்டும்தான் தவறு—தவறு—முழுத் தவறு என்று பாரதபுத்திரர்களிற் சிலர் பரபரப்புடன் பேசக்கூடும். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் விடைகூறப்போவதில்லை. நாம் கூறினால் அவர்கள் ஏற்பார்களா? அவர்கள் மனதுக்கு உகந்த அமைச்சர் ஹரிகிருஷ்ண மேதாப் அவர்களையே விடைகூற வைக்கிறோம். கேட்டு உணர்ந்து அறிந்து தெளிவு பெறட்டும், அத் தேசியத் திருவாளர்கள்.

"கைத்தறி நெசவுத் தொழிலாளர் உலகில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி மத்திய சர்க்காரின் முன்யோசனைக் குறைவால்தான் ஏற்பட்டது என்பதை நான் மனப்பூர்வமாகவும் கண்ணியமாகவும் ஒப்புக்கொள்கிறேன். இந்த நெருக்கடிக்குச் சென்னை ஆட்சியாளர்கள் எவ்வகையிலும் பொறுப்பாளிகள் அல்லர். டில்லி ஆட்சியாளர்களாகிய நாங்கள்தான் இந்த நெருக்கடிக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும்."

மேதாப் அளித்த மணிமொழிகள், இவை.

தேசியத் தோழர்காள், இப்போது கூறுங்கள்! நெசவாளர் உலகில் இதுபோது சுழன்று சுழன்று வீசி சொல்லொணாத் துயரத்தை உண்டுபண்ணிவரும் வேதனைப் புயலை மூட்டிவிட்டது உங்கள் ஆட்சியாளர்கள்தானா, அல்லவா?

"சென்னை ஆட்சி அல்ல, டில்லி ஆட்சிதான் காரணம் இந்த நெசவாளர் துயரத்திற்கு" என்று

வேண்டுமானால் கூறுங்கள், கூறத் தைரியம் இருந்தால்!

ஹரிகிருஷ்ணனுரே அப்படித்தான் கூறியிருக்கிறார் —உண்மையும் அதுதான்—டில்லி ஆட்சிதான் காரணம் நெசவாளர் துயரத்திற்கு—இல்லை என்று நாங்கள் கூறவில்லை—ஆனால் உங்களுக்கு உண்டா அந்த உலகறிந்த உண்மையை ஊராருக்கு, எடுத்து விளக்கும் தைரியம்?

உண்டா?

உண்டு என்று உங்களில் இரண்டொருவர் முன் வந்து, இந்த நெருக்கடிக்கெல்லாம் மூலகாரணம் டில்லி தேவதைகளின் போக்குதான் என்பதைத் திட்டவட்டமாகக் கூறினாலும் கூறலாம். அப்படிப் பட்ட அஞ்சாத நெஞ்சர்கள் இரண்டொருவர்கூட உங்களிடம் இல்லை என்று நாங்கள் கூறமாட்டோம்—இருக்கிறார்கள்.

இருந்தால் என்ன?

டில்லி ஆட்சிமீதுதான் பழி சுமத்தப்படவேண்டுமே தவிர சென்னை ஆட்சிமீதல்ல என்று கூறுவார்கள். கூறட்டுமே? கூறிவிட்டால்மட்டும்?

டில்லி ஆட்சியும் காங்கிரஸ் ஆட்சிதானே—'டில்லி'யின் தவறுகளும் காங்கிரசின் தவறுகள்தானே—அதை எப்படி மறைக்க முடியும்?

அருப்புக்கோட்டையிலும் பிற இடங்களிலும் நிகழ்ந்துள்ள நெசவாளர்தம் பட்டினிச்சாவுகள், காங்கிரஸ் ஆட்சிக்கு, காங்கிரஸ் ஆட்சிக்கு மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக்கே ஏற்பட்டுள்ள என்றும் அழியாத களங்கங்கள்.

காங்கிரசின்மீது படிந்துவிட்ட இந்த இரத்தக் கறை என்றும் மறையாது. சிறிதும் மங்காது.

கைத்தறி நெசவாளர் உலகம், அது, இன்று சிந்துகின்ற கண்ணீரை, அடைகின்ற வேதனையை, படுகின்ற துயரத்தை, உறுகின்ற இடையூற்றை, வாழ்கின்ற மரணத்தை, இவற்றிற்கெல்லாம் காரணம் காங்கிரஸ் ஆட்சிதான் என்பதை ஒருநாளும் மறவாது. நிச்சயம்.

தென்னாட்டுக் கைத்தறி நெசவாளி இன்று சிந்துகின்ற ஒவ்வொரு கண்ணீர்த்துளியும் காங்கிரஸ் கட்சியின் சவப்பெட்டிமீது அறையப்படுகின்ற ஒவ்வோர் ஆணி என்பதைக் காணக் கண்படைத்த எவர்தான் காணாதிருக்கமுடியும்?

தேசியத் தோழரே—இப்படி சற்று வாரும்—அதோ தொலைவில் எலும்புக் கூடு ஒன்று நிற்கவும் முடியாமல் தள்ளாடுகிற காட்சி தெரிகிறதல்லவா—உண்மையில் எலும்புக்கூடு அன்று அது; கைத்தறி நெசவாளியின் உருவம். அந்த நெசவாளியின் அருகே சென்று பாரும். அவன் கண்களிலிருந்து, நீர், ஆறெனை ஓடும் காட்சியைக் காண்பீர். சற்றுக்கூர்ந்து கவனியும். அந்த நீர் அருவி, சர்வாதிகாரப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் காங்கிரஸ் மாளிகையைச் சுட்டுப் பொசுக்கும் பிரம்மாண்டமான நெருப்பு ஜ்வாலையாக மாறுவதைக் காண்பீர். உமக்கென்ன பித்தமோ—நீர்த்துளியிலே நெருப்பின் தன்மை எப்படித் தோன்றும் — என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறதா உமக்கு.

ஐயோ பாவம்—நீர் படித்ததில்லைபோலும் அந்தப் புரட்சிக் கவிஞர் மகமது இக்பாலின் வீரம் தெறிக்கும் சொற்களை. நீர் எப்படிப் படித்திருக்க முடியும்—உமக்கு ஏது நேரம் அதையெல்லாம் படிக்க—உமக்குத்தான் அடக்குமுறை அகராதியைப் புரட்டுவதற்கும், அதிற் சற்று ஓய்வு கிடைக்கிறபோது தூஷணை துந்துபியை முழக்குதற்கும் நேரம் சரியாக இருக்கிறதே!

கவிஞர் இக்பால் கூறியிருக்கிறார் ஓர் இடத்திலே, தெளிவாக, அழுத்தத் திருத்தமாக, அடக்குமுறை அண்ணல்களுக்குக்கூட அறிவுத் தெளிவு பிறக்கும் விதமாக.

"சில சமயங்களில், நீர்த் துளியிலும் நெருப்பின் தன்மை தோன்றும்; பலவீனன் தேகத்திலும் சிம்மத்தின் இரத்தம் ஓடும்; புழுவுங்கூட திருப்பித் தாக்கும். அதிகார வர்க்கத்தின் கொடுமை அதிகமாகும்போது இப்படி நடப்பதுண்டு."

* * *

**கேட்கிறதா நண்பரே இக்பால் குரல்?**

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வருகின்றாள். அவளைக் கண்டதும் இருவரும் திடுக்கின்றனர். பின்பு...]

தி: வாழ்க நீவிர் இருவரும் பல்லாண்டு!

கா: திலோத்தமா, இதென்ன கோலம்?

தி: தோழி, இனி இந்த ஆடம்பர வாழ்க்கையும், போகபாக்கியங்களும் எதற்கு எனக்கு? என் பெற்றோரை இழந்தேன். என் உயிரின் ஜீவனை இழந்தேன். (அருணனை நோக்கி) இனி என் கால்கள் போகுமிடமெல்லாம் போவேன். என் மனதில் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் எண்ண அலைகள் ஒருவாறு தணிந்தபின்பு அவசியம் இவ்விடம் வருவேன். வீரரே, தோழியே, என்னை மறந்துவிடாதீர்கள்...]

அ: மறப்பதா....திலோத்தமா ...சோதரி, உன்னை இச் சந்ததி மட்டுமல்ல முல்லைநாட்டின் எதிர்காலச் சந்ததிகளும் வாழ்த்தத் தவறாது! உனது வரவை நாங்கள் வெகு சீக்கிரத்தில் எதிர்பார்க்கின்றோம்.

தி: மகிழ்ச்சி......அன்புள்ள தோழியே—வீரரே...நான் வருகிறேன்.

[பிரியாமனத்துடன் பிரிகின்றாள். பாடிக்கொண்டே செல்கிறாள். இருவரும் கண்கலக்கமுடன் அவ்வீர வனிதையைப் பார்க்கின்றனர். பாடிக்கொண்டே மறைகிறாள். அத் துயரக் காட்சியை ஆதவனும் காணச் சகியாது மேலைத் திசையில் மறைகின்றான்!]

முற்றிற்று.

# வடநாடு வளர தென்னாடு தேய்கிறது!

—(*)—

# இன்றைய இந்தியாவின் இருள் சூழ்ந்த நிலைமை.

—o—

## தென்னாட்டு நெசவாளர்களின்
### தத்தளிப்புக்கான காரணம்

★

கைத்தொழில்களைப் பொறுத்தவரையில், வடநாடு, பூந்தோட்டமாக இருக்கிறது. தென்னாடோ, பாலைவனமாக இருக்கிறது.

வடநாட்டிலே, தடுக்கி விழுந்தால் தொழிற்சாலைகள்மீது தான் விழ வேண்டும்—தொழிற்சாலைகள் அவ்வளவு ஏராளம் அங்கே. ஆனால் தென்னாட்டிலோ இருக்கும் தொழிற் சாலைகளைப் பூதக்கண்ணாடி வைத்துத்தான் தேடிப் பிடித்துக் கண்டுபிடிக்க வேண்டும்--தொழிற்சாலைகள் அவ்வளவு குறைவு இங்கே.

வடநாட்டிலே, ஒவ்வொரு முக்கியமான நகரத்திலேயும் தொழிற்சாலைகளின் புகை ஓயாமல் வானத்தை எட்டிப் பிடித்து முத்தமிட்டபடி இருக்கும். ஆனால் தென்னாட்டிலோ தொழிற்சாலைகளின் புகையைக் காண்பது மிகக் கடினம்.

வடநாடு, தொழிற்சாலைகளை ஏராளமாகத் தன்னகத்தே கொண்டிருக்கும் காரணத்தால் இலட்சாதிபதிகளையும் கோடீஸ்வரர்களையும் உற்பத்தி செய்தபடி இருக்கிறது. தென்னாடு, தன்னகத்தே மிகச் சில தொழிற்சாலைகளும் இல்லாமல் தவிக்கிற காரணத்தால் ஓட்டாண்டிகளையும் பிச்சாண்டிகளையும் தான் உற்பத்தி செய்ய முடிகிறது.

சிமெண்ட் வேண்டுமா—வடநாட்டுக்காரர்களிடமிருந்துதான் வாங்கவேண்டும்.

இரும்பு சாமான்களா-வடநாட்டு டாடா கம்பெனிதான் உற்பத்தி செய்கிறது.

மருந்து வகைகளா—பம்பாய் மாகாணத்திற்குத்தான் 'ஆர்டர்' அனுப்பப்பட வேண்டும்.

மின்சார பல்புகளா—வங்காளத்தில்தான் அவை உருவாக்கப்படுகின்றன.

எழுதும் தாள் தேவையா—அதுவும் கல்கத்தாவிலிருந்துதான் வந்தாக வேண்டும்.

வாழ்க்கைக்கு இன்றியமையாமல் தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அத்தனையும் வடநாட்டிலேதான் தழைத்தோங்கி வளர்கின்றன. தென்னாட்டிலே, முக்கியமான பொருள்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் எவையும் குறிப்பிடத்தக்க அளவு இல்லை.

தொழிற்சாலைகள் தென்னாட்டில் இல்லை என்றால் அவை தோன்றி வளர்வதற்கான வசதிகள் இங்கே இல்லை என்று அல்ல அர்த்தம். தேவையான வசதிகளும் மூலப்பொருள்களும் இங்கே ஏராளமாக இருக்கின்றன.

"அகிலும் தேக்கும் அழியாக்
குன்றம்!
அழகாய் முத்தக் குவியும்
கடல்கள்!
முகிலும் செந்நெலும் முழங்கும்
நன்செய்!
முல்லைக்காடு மணக்கும் நாடு"

இது என்பது வெறும் கவிதை மட்டுமல்ல, திராவிடநல் திருநாட்டின் உண்மை நிலைமை.

தென்னாடு, வளம் நிறைந்த நாடு. ஏராளமான தொழிற்சாலைகள் தாராளமாகப் பணியாற்றி வகை வகையான பண்டங்களை விதம் விதமாகச் செய்து குவித்து நாட்டை இன்ப நிலையமாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்வதற்குத் தேவையான எல்லா இயற்கைச் செல்வங்களும் எழில்பெற அமைந்திருக்கும் நாடு, இந்தத் தங்கத் திராவிடநல் திருநாடு.

மண்ணுக்கடியிலே போனால் தங்கம். கடலுக்குக் கீழே போனால் முத்து. ஊருக்குள்ளே நுழைந்தால் ஆறுகள். எங்குப் பார்த்தாலும் எவ்வளவு கடினமான தொழில் புரியவும் தயார் கூறி நிற்கும் தீரத் திராவிடர்கள். இது, திராவிடத்தின் நிலை. இந்த நிலையில் உள்ள ஒரு நாட்டில் தொழில்கள் வானுற ஓங்கி வளம்பெற வளர்வது எளிது.

என்றாலும் தொழில்கள் இங்கே வளரவில்லை.

வளரவில்லை என்றால் வளரவிடப்படவில்லை.

தென்னிந்தியா அதன் விருப்பத்தைக் கேளாமலே வட இந்தியாவுடன் இழுத்துப் பிணைக்கப்பட்டிருக்கிறது. வட-இந்தியாவோ தொழில் துறையிலே முன்னணியில் நிற்கும் நாடு; மேலும் மேலும் முன்னேறிச் செல்வதிலே முழு விருப்பமும் மட்டற்ற நம்பிக்கையும் கொண்டுள்ள நாடு. தொழில் துறையைக் குறித்த அளவிலே தென்னிந்தியா, குழந்தை நிலையில் உள்ள நாடு. கட்டமைந்த உடலும் திரண்டுருண்ட தோளும் படைத்த முறுக்குமீசை வாலிபன் நிலையில் உள்ள வட இந்தியாவோடு, தத்தித் தவழ்ந்து தளர்நடை நடக்கும் சின்னஞ்சிறு குழந்தை நிலையில உள்ள தென்னிந்தியாவையும் ஒன்றாக நிற்கவைத்து இருவரையும் ஓட்டப் பந்தயத்தில் இறங்கவைத்தால் எப்படி இருக்கும்-அப்படிப்பட்ட நிலை தான் இருக்கிறது இப்போது.

தென்னிந்தியா குழந்தை நிலையிலும், வடஇந்தியா, வளர்ந்து பெரியவனாகி இருக்கும் வாலிபன் நிலையிலும் உள்ளனர் என்பது மட்டும்கூட அல்ல இன்றைய நிலை!

இந்தக் குழந்தையின் காலை, அந்தப் பெரியவன், அரசியல் திட்டம் என்ற இரும்புச் சங்கிலிகொண்டு அடிமைத தன்மை என்கிற இரும்புத் தூணோடு சேர்த்துப் பிணைத்துக் கட்டிப் போட்டுவிட்டு, பிறகு குழந்தையைப் பார்த்து, "ஏடா சிறுவா, வாடா என்னோடு பந்தயத்திற்கு!" என்று அறைகூவி அழைக்கிறான் இன்றைய தினம்.

தொழில்துறையிலே தென்னிந்தியா, காலும கையும் கட்டிப் போடப்பட்ட சிறு குழந்தையின் நிலையில்தான் இருக்கிறது. வட இந்தியாவோ வேகமாக ஓடி ஆடி வேண்டியபடி யெல்லாம் வாழக்கூடிய வாலிபன் நிலையில் சிறப்புற்றுத் திகழ்கிறது.

கையும் காலும் கட்டிப் போடப்பட்ட அந்தச் சிறு குழந்தை உண்பதறகாக அதன் எதிரே சிறிதளவு குவித்து வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருளும் அந்தக் குழந்தை அலற அலறத் திடீரென்று பறிக்கப் பட்டுவிட்டால், அந்தக் குழந்தையின் நிலை எப்படி யிருக்கும்—அப்படித்தான் இருக்கிறது, தன்னகத்தே உள்ள கைத்தறி நெசவாளர்கள் கடுந்துயர் அடைந்து கண்ணீர் சிந்துகின்ற காட்சியைக் கண்டு, தென்னாடு, திடுக்கிட்டெழுந்து துடிதுடித்துத் தேம்புகின்ற இன்றைய நிலைமை.

தென்னாடு, என்னிடத்திலும் கைத்தொழில் ஒன்று இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு, இங்கே வளர்ந்து சிறந்திருக்கும் ஒரே ஒரு தொழில், நெசவுத் தொழில்.

அந்தத் தொழிலுக்குத்தான் இப்போது பயங்கரமான ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

தென்னாட்டிலே தழைத்திருப்பது ஒரே ஒரு தொழில். அந்தத் தொழில் இப்போது மரணப் படுக்கையில் தள்ளப்பட்டிருக்கிறது.

சென்னை மாகாணத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் தொழில் நிலையைப்பற்றி ஆராய்ச்சி செய்து விவரமான அறிக்கை ஒன்று தயாரிக்கும்படி, 1947-ல், சென்னை ஆட்சியாளர்கள், பொருளாதார நிபுணர் டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு அவர்களை நியமித்தார்கள்.

1948 ல், தன்னுடைய ஆராய்ச்சிகள் யாவும் முடிந்தபிறகு, அந்த ஆராய்ச்சிகளையும் அந்த ஆராய்ச்சிகளுக்காக அவர் திரட்டிய புள்ளி விவரங்களையும் அடிப் படையாகக் கொண்டு அவர் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கை சென்னை ஆட்சியாளர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, 1940 ல், சென்னை மாகாணத்தில் இருந்த கைத்தறிகளின் எண்ணிக்கை, 5, 41, 879.

ஒரு தறியை நம்பி வாழ்பவர்கள் ஐந்துபேர் என்று வைத்துக் கொண்டு கணக்குப் போட்டுப் பார்த்தால் இந்த ஐந்து லட்சத்து நாற்பதாயிரம் தறிகளையும் நம்பி வாழ்பவர்களின் மொத்த எண்ணிக்கை $27\frac{1}{2}$ லட்சம் என்று அதே அறிக்கை அறிவிக்கிறது.

இந்தப் புள்ளி விவரங்கள், 1940—ல், அதாவது இன்றைக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலை.

இந்தப் பத்து ஆண்டுகளாக ஏராளமான புதிய தறிகள் சென்னை மாகாணத்தில் நிலை நாட்டப் பட்டிருக்கின்றன.

1939 முதல் 1945 வரை நடைபெற்ற சென்ற உலகப் பெரும் போரின் போது, கைத்தறித் தொழிலில் குறிப்பிடத்தக்க அளவு இலாபம் கிடைத்து வந்தது.

அந்த இலாபம், தறித்தொழிலை அதற்குமுன்னர் அறிந்திராத ஏராளமான புதிய மக்களை, அந்தத் தொழிலுக்கு இழுத்துவந்து நிறுத்தி விட்டது.

போர்க் காலத்திற்குப் பிறகு, தொழிலில் கிடைத்துவந்த இலாபம் குறைந்து ஊதியம் சுருங்கி நஷ்டம் கூட ஏற்படத் தொடங்கி விட்டது என்றாலும், போர்க்காலத்தில் தறித் தொழிலில் பாய்ந்த 'புதுவெள்ளம்' அந்தக் காலம் முடிந்த பிறகு கூட அந்தத் தொழிலை விட்டு அகலவில்லை. அகல முடியவில்லை.

இதன் காரணமாக, 1940 ல், ஐந்து இலட்சமாக இருந்த கைத் தறிகள், இப்போது 6 அல்லது 7 இலட்சமாக வளர்ந்திருக்கின்றன என்று நாம்கூட அல்ல, "ஹிந்து" பத்திரிகை, அதன் ஜனவரி 9 ம் தேதி இதழில் தெரிவித்திருக்கிறது அதன் தலையங்கம் மூலம்.

6 அல்லது 7 இலட்சம் தறிகள் இருக்கின்றன என்றால், தறிக்கு 5 பேர் வீதம் கணக்குப் போட்டுப் பார்த்தால், இந்தத் தறிகளை நம்பி வாழ்பவர்கள் கிட்டத்தட்ட 30 அல்லது 35 இலட்சம் பேர் ஆகிறார்கள்.

இவர்கள், திராவிட நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ இருபதில் ஒரு பங்கு ஆகிறார்கள்.

இவ்வளவு ஏராளமான மக்கள் இன்று வாழ வழியின்றி வதைபட்டு வாடுகிறார்கள்.

வாட்டத்திற்கும் வேதனைக்கும் இவர்களுக்குப் போதுமான நூல் கிடைக்காததுதான் காரணம் என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

அப்படியானால் இவர்களுக்கு எவ்வளவு நூல் தேவை—ஏன் அது கிடைக்கவில்லை என்ற இரு கேள்விகள் இயற்கையாகவே எழுகின்றன.

எவ்வளவு நூல் தேவை இவர்களுக்கு?

சென்னை மாகாணத்தில் உள்ள எல்லாக் கைத்தறி நெசவாளர்களுக்கும், மாதத்தில் குறைந்தது 20 நாட்களுக்காவது முழுவேலை இருக்க வேண்டுமானால், மாதந்தோறும், சென்னை மாகாணத்துக்குக் குறைந்தது 29,000 பேல்கள் தேவை என்று, சென்னை கைத்தொழில் அமைச்சர் தோழர் பெருமாள் சாமியார் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

சரி! நம் மாகாணத்திற்கு மாதந்தோறும் தேவைப்படும் நூல் 29, 000 பேல்கள் என்று தெரிகிறது.

தேவை, இது! ஆனால் உற்பத்தி எவ்வளவு? எவ்வளவு நூல் மாதந்தோறும் நம் மாகாணத்தில் உற்பத்தி ஆகிறது?

**டாக்டர் நாராயணசாமி நாயுடுவின் அறிக்கைப்படி,**

1945-ல்,

மாதா மாதம் சென்னை மாகாணத்தில் உற்பத்தியான நூலின் அளவு:—

| | |
|---|---|
| ஜனவரி | 47,156 பேல் |
| பிப்ரவரி | 43,523 |
| மார்ச் | 48,883 |
| ஏப்ரல் | 47,816 |
| மே | 48,190 |
| ஜூன் | 49,236 |
| ஜூலை | 50,093 |
| ஆகஸ்ட் | 46,848 |
| செப்டம்பர் | 48,780 |
| அக்டோபர் | 49,983 |
| நவம்பர் | 45,481 |

| | |
|---|---|
| டிசம்பர் | 49,458 |

1947-ல்

| | |
|---|---|
| ஜனவரி | 34,707 |
| பிப்ரவரி | 30,239 |
| மார்ச் | 31 911 |
| ஏப்ரல் | 31,382 |
| மே | 34 877 |
| ஜூன் | 34,904 |
| ஜூலை | 42,732 |
| ஆகஸ்ட் | 3?,126 |
| செப்டம்பர் | 40,251 |

அமைச்சர் பெருமாள்சாமி ரெட்டியார் சென்னை சட்டசபையில் தெரிவித்துள்ள கணக்குப்படி,

1950-ல் உற்பத்தி

| | |
|---|---|
| ஜூன் | 39,642 |
| ஜூலை | 46,043 |
| ஆகஸ்ட் | 43 417 |

இந்தப் புள்ளி விவரங்களைச் சற்று ஆராய்ந்து பார்த்தால், மாதா மாதம், மிக அதிகமாகப் போனால் 50,000 பேல் நூலும், மிகக் குறைவாகப் போனால் 30,000 பேலும் உற்பத்தியாகின்றன என்பது தெளிவாகிறது.

சராசரியாகப் பார்த்தால் மாதந் தோறும் சுமார் 40,000 பேல்கள் உற்பத்தியாகின்றன என்று தாராளமாகக் கூறலாம்.

இவற்றில், சென்னை மாகாணத்தில் உள்ள நெசவாலைகளுக்கு (மில்களுக்குத்) தேவைப்படும் நூல், அறிஞர் நாராயணசாமியார் அறிக்கைப்படி, மாதா மாதம் 7000 அல்லது 8000 பேல்கள் ஆகின்றன.

எனவே மாதா மாதம் சென்னை மாகாணத்தில் உள்ள நூல் மில்களில் உற்பத்தியாகும் நூல் 40,000 பேலில், அந்த மில்களின் சொந்த உபயோகத்திற்குத் தேவைப்படும் 8000 பேல் நூலைக் கழித்துவிட்டால், மிச்சமாக, கைத்தறி நெசவாளர்களுக்கென்று இருக்கும் நூல் சராசரி 32,000 பேல்.

அமைச்சர் பெருமாள் சாமியார் தெரிவிக்கிறார் மாதா மாதம் நம் கைத்தறிகளுக்குத் தேவைப்படும் நூல் 29,000 பேல்தான் என்று.

ஆனால் சென்னை மாகாண மில்கள் சென்னை மாகாணக் கைத்தறிகளுக்குத் தரத் தயாராக இருக்கும் நூலோ மாதா மாதம் 32,000 பேல்.

## தேவை, 29000 பேல் நூல் தான்!

## ஆனால் மில்கள் தருவது 32000 பேல் நூல்!

தேவையைவிட, மில்கள் நமக்குத் தரத் தயாராக இருக்கும் நூல், அதிகம்!

என்றாலும் கைத்தறி உலகில் நூல் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

## ஏன்?

இந்த ஏன் என்ற கேள்விக்கான விடையிலேதான் இன்றைய கைத்தறி நெசவாளர் பிரச்சினையின் முழு விளக்கமும் அடங்கியிருக்கிறது.

* * *

சென்னை மாகாணத்தில் உற்பத்தியாகி, சென்னை மாகாண மில்களின் உபயோகத்துக்குப் போக மிச்சமிருக்கும் நூல்பேல்கள் அவ்வளவும் சென்னை மாகாணக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தரப்பட்டு விட்டால் இன்றைய தினம் ஏற்பட்டுள்ளது போன்ற நூல் நெருக்கடி ஏற்படவே ஏற்படாது.

நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூலைவிட சற்று அதிகமாகவே மார்க்கட்டில் நூல் அப்போது நடமாடும்.

ஆனால் இப்போது நடப்பது அது அல்ல.

'அகில இந்தியா', என்ற பெயரால், டில்லி, இங்கு இருக்கும் மிச்ச நூல் அவ்வளவையும் இங்கிருந்து வடநாட்டுக்கு எடுத்துச் சென்று, அங்கிருந்துகொண்டு சென்னை மாகாணத்திற்கு இவ்வளவுதான் தரமுடியும் என்று ஏதோ ஓர் அளவு நூலை ஒதுக்குகிறது. அப்படி ஒதுக்கப்படும் நூல் கைத்தறி நெசவாளரின் தேவையைவிட மிகவும் குறைவாக இருக்கிறது.

அமைச்சர் பெருமாள் சாமியார் சென்னை சட்டசபையில் 12-2-51 அன்று தெரிவித்துள்ள தகவல்படி, 1950-ம் ஆண்டில், ஜனவரி மாதத்திற்கு 22000 பேலும், ஏப்ரல் மாதத்திற்கு 16,000 பேலும், மே மாதத்திற்கு 13000 பேலும், செப்டம்பர் மாதத்திற்கு 16000 பேலும், அக்டோபர் மாதத்திற்கு 12000 பேலும், டிசம்பர் மாதத்திற்கு 11,000 பேலும் தான் சென்னை மாகாண கைத்தறி நெசவாளர்களுக்கு, டில்லி, அனுப்பி வைத்துள்ள நூலின் அளவு.

அதாவது, சராசரியாகப் பார்த்தால் 16000 பேல் நூல்தான் மாதா மாதம் சென்னை மாகாண நெசவாளர்களுக்கு டில்லி ஆட்சியாளர்களால் 1950-ல் தரப்பட்டிருக்கிறது.

இப்போது, இதுவரை இங்கே தரப்பட்டுள்ள எல்லாப் புள்ளி விவரங்களையும் மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள். அப்படிப் பார்த்தால் கீழ்க்கண்ட பல உண்மைகள் தெளிவாகத் தெரியும்.

1. சென்னை மாகாணத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மாதம்தோறும் தேவைப்படும் நூலின் அளவு, ஆட்சியாளர் கணக்குப்படி, 29,000 பேல்.

2. சென்னை மாகாணத்தில் உள்ள நூல் மில்களில் உற்பத்தியாகும நூலில், அந்த மில்களின் சொந்தத் தேவைபோக, மிச்சமாக, கைத்தறி நெசவாளர்களுக்கென்று இருக்கிற நூல், மாதந் தோறும், 32000 பேல்.

3. இந்த 32000 பேல் நூலும் நெசவாளர்களுக்குத் தரப்பட்டு விட்டால் நெசவாளர்களிடையே நூல் பஞ்சம் ஒருபோதும் ஏற்படாது.

4. ஆனால் இப்போது அகில இந்தியக் கட்டுப்பாட்டின்கீழ் சென்னை மாகாண நூல் சிக்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், டில்லி, இந்த 32000 பேலில், 16000 பேலைமட்டும்தான் சென்னை நெசவாளர்களுக்கென்று தருகிறது.

5. மிச்சமிருக்கும் 16000 பேலையும், டில்லி, வடநாட்டில் உள்ள நெசவாலைகளுக்கு அளித்து விடுகிறது.

6. எனவே தென்னாட்டில் உள்ள நெசவாளர்களுக்குத் தரப்படும் நூலின் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது.

7. இப்படி அவர்கட்குத் தேவைப்படும் நூலைவிட அவர்கட்குத் தரப்படும் நூலின் அளவு குறைவாக இருப்பதால்தான் தென்னாட்டு நெசவாளர்களிடையே கடுமையான பஞ்சமும் பரிதாப நிலையும் பட்டினிப் பட்டாளங்களும் பாழும் பசிப்பிணியும் உருவாகியிருக்கின்றன.

8. ஆனால் சென்னை மாகாணம், அதாவது திராவிடநாடு, நூல் கட்டுப்பாட்டைப் பொறுத்த அளவாவது வடநாட்டோடு இணைக்கப்படாமல் தனியாக இருந்திருக்குமானால், இந்த நூல் பஞ்சம் தென்னாட்டில் ஏற்பட்டிருக்கவே முடியாது. நம் நெசவாளர் உலகமும் வேதனைப் புயலிற் சிக்கி வாடியிருக்கவேண்டிய நிலை தோன்றியே இருக்காது.

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத் தளபதிகளில் ஒருவர்—அசையா உறுதியும் அஞ்சா நெஞ்சும் படைத்தவர், **சேலம் சித்தையன்.**

அவர்தான் களத்திலே முதலிலே இறங்கினார் அவர் தம் நண்பர் **பூபாலையா** அவர்களுடன்.

செயல்வீரர் சித்தையன் சேலம் நகரத்தில் உயர்த்திய போர்க் கொடி தமிழ் நாடெங்கணுமிருந்த நெசவாளர்களின் உள்ளத்தில் எல்லாம் புதியதோர் எழுச்சியையும் உற்சாகத்தையும் ஊட்டியது.

**அருப்புக்கோட்டை** அடுத்தாற்போல் அறப்போர்க் களத்தில் துணிந்து இறங்கிற்று. செயல் திறமும், எடுத்ததை முடிக்கும் ஆற்றலும் படைத்த பாண்டிநாட்டுத் திராவிட இளைஞரேறு **எஸ்.எம். இராமசாமி,** அருப்புக்கோட்டைப் போராட்டத்தை அமைதியாக ஆனால் அற்புதமாக நடத்திக் காட்டலானார்.

தீரர் சித்தையன், சேலம் மாவட்டத்துத் திராவிடர் தளபதி என்றால், **வீரர் இராமசாமி** இராமநாதபுரம் வட்டாரத்து இளைஞர் தலைவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த இருபெருந் தளபதிகள் தந்தம் ஊர்களில் தொடங்கிவைத்த அறப்போர், பிறகு, நாடெங்கும், நெசவாளர்கள் திரண்டு வாழும் இடமெங்கும் காட்டுத்தீயென விரைந்து பரவி ஆளவந்தார்களை அதிரச் செய்துவிட்டது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, சீராளா—நெல்லூர்—குண்டூர்—இராயலசீமா முதலான ஆந்திர நாட்டுப் பகுதிகளிலும் நெசவாளர் போராட்டம் இன்று உச்சநிலை பெற்று விட்டது.

**"போதுமான நூல் கொடு—அது கொடுக்கப்படும்வரை போதுமான பஞ்சப்படி கொடு"**—இதுதான் எங்கெங்கும் போர்க் கொடி உயர்த்தியுள்ள முப்பது இலட்சம் நெசவாளர்களின் முக்கியமான கோரிக்கை.

இந்தக் கோரிக்கை நியாயமானது. நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டியது.

நூல் கிடைத்தாக வேண்டும்—அதுவும் உடனே கிடைத்தாக வேண்டும்.

அதுவரை பஞ்சப்படி கொடுத்தாக வேண்டும்—அது, போதுமான அளவு இருந்தாக வேண்டும்.

நெசவாளர்களின் இந்தச் சிறிய வேண்டுகோளை, ஆட்சியாளர்கள், உடனடியாக நிறைவேற்றியாகவேண்டும்.

இல்லையேல், நெசவாளர் போராட்டம், திக்கெட்டும் பரவி, தென்னாட்டையே ஒரு குலுக்குக் குலுக்கி, ஆளவந்தார்களை, அவர்களை அமர்ந்துள்ள நாற்காலிகளைவிட்டுக் கீழே புரட்டித் தள்ளிவிட்டுத்தான் ஓய்வடையும் என்பதை ஆளவந்தார்கட்கு, அவர்கள்மீது நமக்குள்ள 'அன்பு' காரணமாக, முன்கூட்டியே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

**திராவிட முன்னேற்றக் கழகம்,** நெசவாளர்களின் வேண்டுகோளை முழு மனத்துடன் ஆதரிக்கிறது. அவர்களின் போராட்டம் முழு வெற்றி பெற வேண்டும் என்று மனமார வாழ்த்துகிறது. அவர்களின் நேர்மையான இக் கிளர்ச்சிக்குத் தங்களுடைய எல்லாவகை ஒத்துழைப்பையும் அளிக்கத் தயாராக இருக்கிறது.

வெல்க நெசவாளர் போராட்டம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் ஆந்திரர்.

வடஇந்திய ஆதிபத்யத்தின்கீழ் தென்னாடு சிக்கித் தவிக்கிறது சென்ற பல ஆண்டுகளாக என்ற உண்மையை சமீப காலமாகத்தான் ஆந்திரநாடு உணரத் தொடங்கிவிட்டது என்பதற்கான பல அறிகுறிகளில் ஒன்றுதான், தென்னேட்டியார் நிகழ்த்தியுள்ள சட்டசபைச் சொற்பொழிவு.

திராவிடநாடு திராவிடருக்கே என்று வெளிப்படையாகக் கூறவில்லை தென்னேட்டியார்

ஆனால் தென்னாட்டு நூல் தென்னாட்டாருக்கே என்று வீரமுழக்கமிட்டிருக்கிறார்.

தென்னாட்டு நூல் தென்னாட்டாருக்கே என்ற முழக்கத்தின் அடிப்படைத் தத்துவம்தான் திராவிடநாடு திராவிடருக்கே என்பது.

இந்த வீர முழக்கத்தை எழுப்பியவர், அந்த இதய கீதத்தையும் எழுப்ப அதிக நாட்கள் ஆகாது. நிச்சயம் ஆகாது.

இரண்டும் இரண்டும் நான்கு என்பதை ஒப்புக்கொண்டுவிட்டார்கள் தென்னேட்டியார்கள். 'இனி, நான்கும் நான்கும்' எட்டு என்பதை ஒப்புக்கொள்ள — எத்தனை நாட்கள் ஆகும்?


# பாலைவனம்

இராதாமணாளனின் புதிய எழுத்தோவியம்.

உண்ண உண்ணத் தெவிட்டாதது கருத்து அள்ளும் செஞ்சுவைத் தேனமுது.

விலை அணா 10

# பழி

தி. மு. க. தலைமைக்கழக அலுவலர்

நா. இராசவேல்

தீட்டிய சிறுகதைச் சித்திரம் சுவை மிக்கது.

விலை அணா 4


Edrted, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyars Wise Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.(Hon)